கிழக்குப் பல்கலைக்கழகம் - இலங்கை

கலை கலாசார பீடம்

நான்காம் வருடம் / முதலாம் அரையாண்டு **2014/2015 (August2020)**

**TLS /** 4113 சங்கக் கவிதைகளும் *கவிதையியலும்*

நேரம் 3 மணித்தியாலங்கள்

முதலாம்பகுதியிலிருந்து இரு வினாக்களுக்கும் இரண்டாம் பகுதியிருந்து மூன்று வினாக்களுக்குமாக எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.

பகுதி - ஒன்று

1. i. தமிழில் தோன்றிய ஆரம்பகால இலக்கியங்களை சங்க இலக்கியம் என்று கூறுவது பொருத்தமானதா?. இல்லை எனில், காரணம் காட்டுக. (5 புள்ளிகள்)

   ii அண்மைக்கால தொல்லியல் ஆய்வுகள் சங்ககாலத் தமிழர் வாழ்வு குறித்து வெளிப்படுத்தும் விடயங்களை எடுத்துக்கூறுக. (15புள்ளிகள்)

2. i. சங்க நூல்களைத் தொகுத்தோர் தொகுப்பித்தோர் பற்றிய பட்டியலைத் தருக. (5 புள்ளிகள்)

   ii. அவை தொகுக்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை எனக் கருதுகிறீர். (5புள்ளிகள்)

   iii அவற்றின் தொகுப்பிலே ஏற்பட்டிருக்கக் கூடிய பிரச்சினைகளை எடுத்துக் காட்டுக. (10புள்ளிகள்)

3. பின்வருவனவற்றுள் இரண்டினுக்கு விளக்கக் குறிப்பு எழுதுக.
   i. சங்க இலக்கியம் பற்றிய இலக்கண நூல்கள்
   ii. காஞ்சித் திணை
   iii. அகப் பாடல்களில் தலைவி
   iv. மகட்கொடை மணமும் பெண்களும். (10+10 புள்ளிகள்)

பகுதி- இரண்டு

4. அகத்திணைக் கோட்பாடு பற்றி தெளிவுறுத்தி இக்கோட்பாடு சங்க அகத்திணைப் பாடல்களில் செயல்பட்டிருக்குமாற்றை குறுந்தொகைப் பாடல்களை அடிப்படையாக வைத்து ஆராய்க . (20புள்ளிகள்)
5. புறநானூற்றிற் காணப்படும் திணைதுறை அமைப்புக்கும் அக்கால சமூகப் படிநிலைக்குமிடையே காணப்பட்ட தொடர்பினைப் பரிசீலனை செய்க. ( 20 புள்ளிகள்)

6. சங்ககாலப் பெண்பாற் புலவர்கள் பெண்களின் அனுபவங்களைத் தமது பாடல்களில் வெளிப்படுத்துமாற்றை ஆராய்க. . (20 புள்ளிகள்)

7. ஆற்றுப்படை இலக்கியத்தின் பண்புகளை விளக்கி பத்துப்பாட்டில் காணப்படும் ஆற்றுப்படை நூல்களின் தன்மைகளை ஆராய்க. . (20 புள்ளிகள்)